**கேகாலை நகர சபை**

**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 02 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை நகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும்இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான பகிரங்கப்படுத்தப்பட்ட மயான நிலக் காணி, விருந்தினர் விடுதியுடன் காணி, பென்சிஸ் மொலமுரே மாவத்தைக் காணி மற்றும் ஹர்பட் ஜே.செனவிரத்ன மாவத்தையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வீட்டின் பெறுமதி என்பன கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக காணி மற்றும் கட்டிடங்களின் உள்ளபடியான பெறுமதி கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட பிட்டிஹுமவத்த காணியிலிருந்து கிடைத்த 10 சதவீத நில அளவான 67.5 பேர்ச்

காணியின் பெறுமதியான ரூபா 15,153,307 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின சம்பளமாக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,501,701 தொகை வழுக்களுடன் மூலதன செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் உபகரண செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 57,515,512 ஆக இருந்த போதும் அது ரூபா 57,870,296 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 354,784 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானம் கணிப்பீடு செய்யும் போது 2013 சனவரி மாதம் முதல் 2014 மார்ச் மாதம் வரையான காலத்தில் கிடைக்கப்பெற்ற ரூபா 5,246,396 தொகை அட்டுறு அடிப்படைக்கு புறம்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது பிடியாணைக் கட்டணமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 533,550 தொகையான மொத்தத் தொகையும் அட்டுறு அடிப்படைக்குப் புறம்பாக வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) பெறவேண்டிய உறுப்பினர் படி மீளளிப்பு வருமானம் ரூபா 180,000 ஆக இருந்த போதிலும், அது ரூபா 155,000 ஆக ரூபா 25,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் வருமானக் கடன்பட்டோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது காணி விற்பனைகளுக்குரிய கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னுள்ள நிலக் கூறுகளின் விற்பனைப் பெறுமதி தொடர்பான தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் பெறப்பட்ட 1 சதவீதமான ரூபா 1,784,746 வைப்புப் பணம், பிழையாக ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,820,229 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,873,190 ஆனமையால் வேறுபாடு ரூபா 947,039 ஆகும்.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 16,392,330 ஆகக் காண்பிக்கப்படுகின்ற பொது வைப்புக் கணக்கு பல வருடகாலமாக சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் பொது வைப்புப் பதிவேட்டுடன் கணக்கின் மீதியை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த தொங்கல் கணக்குகளின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,992 ஆகும்.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகளும் செலுத்த வேண்டிய கணக்குகளும்

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 3,781,875 மற்றும் ரூபா 44,682,834 ஆகக் காணப்பட்டன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

02 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 13,447,846 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 2005 யூன் 01 ஆந் திகதிய சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2005/4 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| iv ஆம் பிரிவு | காணி விற்பனைக்குரிய இரண்டு காணிகளிலிருந்து 1 சதவீத வைப்பாக ரூபா 1,784,746 தொகை பெறப்பட்டிருந்த போதிலும், காணித் துண்டுகளை விற்பனை செய்ததன் பின்னர் விற்பனைப் பெறுமதிக்குரிய 1 சதவீத வரித்தொகை செலுத்துவதற்கான நிபந்தனையை உள்ளடக்கி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| viii ஆம் பிரிவு | காணி விற்பனை தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,556,845 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,050,076 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 10,493,231 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

---

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 4 வருமான விடயங்களில் குறைவும் 3 செலவின விடயங்களில் அதிகரிப்பும் நிதி விளைவு ரூபா 10,493,231 இனால் வீழ்ச்சியடைந்தமை தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**2.3 வருமான நிர்வாகம்**

---

**2.3.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்**

---

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| i. | ஆதனவரியும் வரியும் | 4,985 | 1,965 | 9,355 | 6,582 | 3,020 | 2,733 | 5,753 |
| ii. | வாடகை | 5,343 | 5,462 | 28,342 | 27,436 | (120) | 905 | 785 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 267 | 267 | 2,609 | 2,887 | - | (278) | (278) |
| iv | ஏனைய வருமானம் | 17,221 | 16,690 | 14,018 | 13,347 | 525 | 671 | 1,196 |

மேற்கூறப்பட்ட தகவல்களை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீதி | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| நிலுவையான ஆதனவரி | 5,753 | 5,002 | 757 |
| நிலுவையான ஏனைய வருமானம் | 1,703 | 39,358 | 37,655 |

## 2.3.2 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,002,800 தொகையான ஆதனவரி நிலுவை மீதியில் அதிகமான வரியிறுப்பாளர்களின் எண்ணிக்கையொன்று நீண்ட காலம் முதல் கொடுப்பனவுகளைப் புறக்கணித்திருந்த போதிலும், நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 170(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் பின்னர் ஆதன வரிக்குரிய ஆதனங்களை அரசாங்க மதிப்பீட்டாளரை வருவித்து மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆதனவரிக்குரிய 77 ஆதன உரிமையாளர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் பெயரில் காணப்படுகின்ற ஆதனங்களுக்காகவும், தனியார் பெயரை உள்ளடக்கி ஆதனவரி அறவிடப்பட்டிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான ஆதனங்களை இனங்கண்டு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.3 வாடகை

புதிய பொருளாதார நிலையத்தில் 52 திறந்த சந்தைக் கடைகளின் வாடகை உரிய பிரகாரம் செலுத்தமையின் காரணமாக, 2010 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்படும் சந்தர்ப்பம் வரையிலும், ரூபா 1,529,853 நிலுவையொன்று

காணப்பட்டதுடன், வாடகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடாமையின் காரணமாக, நிலுவை வாடகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாது வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்கு அவகாசமளிக்கப்பட்டமையினால் 2014 அம் ஆண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 48,000 வாடகைப் பணமொன்று இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.5 மலசலகூட முறைமையின் வாடகை வருமானம்

-----------------------------------------------------------------------------------------

2013 மற்றும் 2014 ஆம் ஆகிய இரண்டு ஆண்டுகளில் 4 வாடகையாளர்களிடமிருந்து ரூபா 109,977 வாடகைப் பணம் மற்றும் ரூபா 112,645 நிலுவை நீர்ப்பட்டியல் கட்டணங்களின் கூட்டுத்தொகையாக ரூபா 222,622 அறவிட வேண்டியிருந்தது.

### 2.3.6 வினோத வரி

-------------------------

மீளாய்வாண்டின் போது சினிமா திரையரங்கு அல்லாத வினோத வரி ரூபா 122,875 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக சட்டரீதியான அதிகாரங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 வியாபார வரி

--------------------------

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் வியாபார வரியாக பெறப்பட வேண்டியிருந்த ரூபா 55,000 வரித் தொகையும், நிலுவை மாதாந்த வாடகையாக ரூபா 37,024 தொகையும், பாதுகாப்பு பிணை வைப்பு பெறப்படாமையினால் உடன்படிக்கையை முறித்ததன் காரணமாக சபைக்குச் சொந்தமாக்கப்பட வேண்டியிருந்த ரூபா 34,200 தொகையும் ஆக ரூபா 126,224 தொைகயான நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாண பிரதம அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 18,005,000 பெறுமதியான 13 வாகனங்களின் உரித்தை சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 2014 சனவரி வரை 03 வேலைகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 83,410 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் சில வருடங்களாக சுட்டிக் காண்பிக்கப்பட்ட வெளியே எடுத்துச் செல்லப்படட 46 புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சம்பளமற்ற விடுமுறைக்காக சம்பளத்திலிருந்து அறவிடும் போது அடிப்படைச் சம்பளம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டமையின் காரணமாக 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு ஆண்டுகளின் போது மாத்திரம் ரூபா 505,842 தொகையான நட்டம் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 397,500 பெறுமதியான 04 நிலையான சொத்துவிடயங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) ரூபா 73,640 பெறுமதியான 1 ½ அங்குல பீவிசீ குழாய்களில் 516 மீற்றர் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 58,776 பெறுமதியான 2 அங்குல பீவிசீ குழாய்களில் 248 மீற்றர் என்பன 2010 சனவரி மாதத்திலிருந்தும் ரூபா

256,650 பெறுமதியான 14.73 தார்பரல்கள் 2013 யூன் 04 ஆந் திகதி வரையிலும் விநியோகிக்கப்படாது களஞ்சிய இருப்பாக வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------------

2014 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி குறித்தொதுக்க நிதியத்தின் கீழ் நந்திவல வத்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 300,000 நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதிலும், உரிய வேலைகள் 2015 பெப்ரவரி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) கடன்பட்டோர் கட்டுப்பாடு